திங்கட்கிழமை, 1970 நவம்பர் 30.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர், புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்–விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

Training in Radiology in Government Hospitals

* 61 THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Education and Health be pleased to state whether there are proposals to train more men in Radiology in the Government Hospitals?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, தற்போதுள்ள அரசு மருத்துவ மனைகளில் ரேடியாலஜி என்று சொல்லப்படும் கதிர்வீச்சு மருத்துவத்தில் எத்தனை பேர் பணியாற்றுகிறார்கள் ? அவர்கள் தற்போதுள்ள தேவைக்கு போதுமான அளவுக்கு இருக்கிறார்களா ? இல்லையென்றால், அவர்களின் எண்ணிக்கையை அதிகப் படுத்தும் எண்ணம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இப்பொழுது கொடுக்கப்பட்டு வருகிற பயிற்சி போதுமானதாக இருக்கிறது என்று கருதப்படுகிறது. தேவைப்படுகிற அளவுக்கு வைக்கப்பட்டிருக்கிறது. 'டிப்ளமா இன் ரேடியாலஜி கோர்ஸ்' என்ற அளவில் சென்னை பெரிய மருத்துவக் கல்லூரியில் 20 பேர்களும், ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில் 4 பேர்களும், மதுரை மருத்துவக் கல்லூரியில் 6 பேர்களும் 18 மாதப் பயிற்சி பெறும் முறை தொடர்ந்து இருந்துகொண்டு இருக்கிறது. இதைத் தவிர, எம்.டி. (ரேடியோ டயக்னசிஸ்), எம்.டி. (ரேடியோ தெரபி) என்று இருக்கிறது. டி.எம்.ஆர். (D), டி.எம்.ஆர். (T) என்கிற தேர்வுகளுக்கு இரண்டாண்டுக் காலம் பயிற்சி பெறுவதற்கு வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, மெடிகல் ஆபீசர்களுக்கு பயிற்சி கொடுக்கும் முயற்சியும் தொடர்ந்து இருந்துகொண்டு வருகிறது. இதனுடைய எண்ணிக்கையை அதிகப்படுத்தும் எண்ணம் இல்லை என்றாலும், அதற்கான பயிற்சி போதுமான அளவுக்குத் தரப்பட்டு வருகிறது. இப்பயிற்சி பெறுவதற்கு முன்வர டாக்டர்கள் கொஞ்சம் பின்வாங்குகிறார்கள். ஏனென்றால், இதிலே படிக்க

வேண்டுமென்றால், ஸ்டடி லீவ் எடுத்துப் படிக்கவேண்டும். அதிலே யும் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு அரைச் சம்பள அளவுக்குத்தான் கிடைக்கக்கூடும். அதனால் பலர் இப்பயிற்சி பெறமுன்வருவதில்லை என்பதைக் கருத்திற்கொண்டு, அப்படிப்பட்டவர்களுக்கு முழுச் சம்பளம் கொடுத்து, அதில் அவர்களுக்குப் பயிற்சி தரும் அத்த கைய முயற்சி மேற்கொள்ளப்பட்டு, அது இப்பொழுது ஆராயப் பட்டு வருகிறது. அந்த வகையில் கிடைக்கவேண்டும் என்ற கருத்து தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. ஆகவே, இப்பொழுது பயிற்சி பெறுகிறவர்களின் எண்ணிக்கையை அதிகமாக்கும் நிலை இல்லை. எம்.டி. (ரேடியோ டயக்னஸிஸ்), எம்.டி. (ரேடியோ தெரபி) ஆகியவற்றில் இரண்டு ஆண்டு மெடிகல் ஆபீசர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, அரசு மருத்துவமனை யில் கதிர்வீச்சு முறையில் மேலும் பலருக்குப் பயிற்சி அளிக்கும் வாய்ப்பை நம்முடைய அரசு உண்டாக்கியிருப்பதைப்போல், சென்னை நகரத்தில் ஜெனரல் ஆஸ்பத்திரியை ஒட்டியிருக்கும் மெட்ராஸ் மெடிகல் காலேஜில் போஸ்ட் கிராஜுவேட் இன்ஸ்டிட் யூஷனை ஒன்றைத் துவக்குவது என்றும், நம்முடைய நாட்டில் புதிது புதிதாக வியாதி வருவதைக் குறித்து ஆராய்ச்சி செய்து கண்டுபிடிக்க அங்கு வசதி செய்துகொடுத்து, மேல் பட்டப்படிப் புக்கு வகை செய்வதென்று அரசாங்கத்தில் ஒரு செயற்குறிப்பு இருந்ததே, அது இப்பொழுது எந்த நிலையில் இருக்கிறது? அது எப்பொழுது செயல்படப் போகிறது என்பதை அமைச்சர் அவர் கள் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் துணைக் கேள்விக்கும் தொடர்பு இல்லை. ஆனால், அதை போஸ்ட் கிராஜுவேட் இன்ஸ்டிட்யூட்டாக ஆக்கவேண்டும் என்ற முயற்சி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், இதுபோன்று பலதரப் பட்ட பட்டப்படிப்புகள் படிக்க முன்வருகிறவர்களுக்கு மேலும் பல ஆண்டுக்காலம் நீடிக்கக்கூடிய அளவுக்கு உயர்த்தப்பட்டு வரு கிறதா ? அதை மேலும் சீராக்கக்கூடிய அளவுக்கு அந்தப் பட்டப் படிப்புக்கு உதவி செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்த ரேடியாலஜியைப் பொறுத்த வரையிலும் கொடுக்கப்படுகிற பயிற்சி கொடுக்கப்பட்டுவருகிறது. அதிலும் சென்னையில் போஸ்ட்-க்ராஜுவேட் டிப்ளமா கோர்ஸ் படிக்கிறவர்களுக்கு ரூ. 200 ஸ்டைபெண்டு கொடுத்து பயிற்சி அளிக்கப்படுகிறது. நான் முதலில் சொன்னபடி, ஸ்டடி லீவ் எடுத்துப் படிக்கவேண்டும் என்ற நிலையை மாற்றி ஓரளவு முழுச் சம்பளச் சலுகை அளிப்பதன்மூலம் மேலும் சில டாக்டர்கள் வந்து பயிற்சி பெறுவார்கள் என்ற நோக் கத்தின் அடிப்படையில்தான் இப்பொழுது அரசாங்கம் அந்த வகையில் பரிசீலித்து வருகிறது.